**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்**

அ.சா.எண். – 7/2020 நாள்–18.06.2024

சாட்சி – வா.சா.2

பெயர் – நல்லதம்பி

1969 ம் ஆண்டு 10–வது சட்டத்தின் விதிகளின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு பிரமாணம் செய்யப்பட்டது.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–**

1) இந்த வழக்கின் வாதி எனக்கு என்ன உறவு முறை என்றால் அவர் எனது மாமியார் ஆகும். நான் எனது மாமியாருடன் சேர்ந்து இந்த மவழக்கை தாக்கல் செய்யவில்லை என்றும், வாதி மட்டும் தனியாக வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வாதி இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள அனைத்து சங்கதிகளையும், எனது பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கை வாதி தாக்கல் செய்வதற்கு முன்பு 1–ம் பிரதிவாதியின் மீதும் மற்றும் பொன்னாயாள் மற்றும் பூபதி ஆகியோர் மீதும் ஏற்கனவே திருச்செங்கோடு கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கும எண்.232/2013 வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான்.

2) மேற்படி வழக்கில் வாதி இந்த வழக்கின் 1–ம் அயிட்ட சொத்திற்கு உரிமை கோரியும், தாவா சொத்தின் சுவாதீனத்திற்கு இடையூறு செய்யக்கூடாது என்றும், தாவா சொத்தின் மேற்கு புற எல்லையை நிர்ணயம் செய்யக் கோரியிருந்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கானது வாதி ராமாயி என்பவருக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கின் தாவா சொத்தை ஒட்டி கம்பி வேலி போடப்பட்டுள்ளது என்றால்

வாதியால் போடப்பட்டது. தாவா சொத்திற்கு மேற்கே இருக்கும் சொத்தானது பூபதிக்கு பாத்தியப்பட்டு மேற்படி பூபதி 1–ம் பிரதிவாதிக்கு சொத்தை விற்று, அதன் பின்னிட்டு 1–ம் பிரதிவாதி, 2–ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான்.

3) தாவா சொத்து தற்போது 2–ம் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது என்றால் இல்லை, எனக்கு அங்கு சொத்து உள்ளது வாதி அனுபவத்து வருகிறார். தாவா சொத்தில் உள்ள வீட்டை 2–ம் பிரதிவாதி வாடகைக்கு விட்டுள்ளார் என்றால், வீடு உள்ளது , வாடகைக்கு இருக்கிறார்களா என்று எனக்கு தெரியாது. மேற்படி வீட்டிற்கு குடிநீர் இணைப்பு , மின்சார இனைப்பு உள்ளது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தில் அமைந்துள்ள வீட்டிற்கான கதவு எண். 3/240 என்றும், அதன் மின் இணைப்பு எண்.04169005121 என்றால் தெரியாது.

4) தாவா சொத்தில் அமைந்துள்ள வீட்டிற்கான வீட்டு வரி மற்றும் மின்இணைப்பு ஆகியவற்றை 2–ம் பிரதிவாதி செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. வாதி ஏற்கனவே தாக்கல் செய்துள்ள வழக்கிலேயே 1–ம் பிரதிவாதி தனபாலுக்கு விற்ற சொத்து செல்லத்தக்கது என்று தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் தெரியாது. எனவே இந்த வழக்கின் 1–ம் பிரதிவாதியானவர் 2–ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்த சொத்து செல்லத்தக்கதல்ல என்று வாதி பரிகாரம் கோரியுள்ளது ஏற்கத்தல்ல என்றால் சரியல்ல. 2–ம் பிரதிவாதிக்கு மட்டுமே அவர் வாங்கிய சொத்திற்கு முழு உரிமை உண்டு என்றும், வாதிக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் பட்டா 2–ம் பிரதிவாதி பெயரில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.